போர் 1 பொள்ளாச்சி. 20—7—51. விலை அரையணா. 6-பக்கம். வெற்றி 3

சட்டசபைக்கு யார் வேண்டும்?

பணம் பெரிதா? சேவை பெரிதா?

கரையான்கள் புத்தெடுக்க, கருநாகம் குடியிருக்கவா?

தேர்தல் போர்டுக்கு கோவை ஜில்லாவிலிருந்து பெரும்பாலும் பணக்காரர்கள் தான் மனுச்செய்துள்ளனர். மூன்று ஸ்தானங்களில் மட்டும் ஊழியர்கள் மனுச்செய்துள்ளனர். போராட்ட காலங்களில் காங்கிரஸைப்பற்றி கனவில்கூட சிந்திக்காதவர்களும், மில் முதலாளிகளும், பத்திரிகை முதலாளிகளும், பணம்படைத்த ஆசாமிகளும்மனுப்போட்டுள்ளனர். பெரியபெரிய தொழில்களையும், மில்களையும் தேசீயமயமாக்கவேண்டிய இக்காலத்தில் முதலாளிகளை சட்டசபைக்கு அனுப்புவது விரும்பத்தக்கதல்ல. சந்தர்ப்பவாதிகளையும் நாட்டில் எந்த சர்க்கார் நடந்தாலும் அதற்கு ஆதரவுதரும், கக்ஷி மாறும் நபர்களையும், பொதுஜனத் தொடர்பற்றவர்களையும், பொதுஜன ஆதரவுஇல்லாதவர்களையும், சுயநலமிகளையும் சட்டசபைக்கு அனுப்பக்கூடாது.

தன்னலம் கருதாத ஊழியர்களையும், பொதுநலப்பிரியர்களையும், நிர்வாகத்திறனும், அனுபவமும், காங்கிரஸின்பால் ஆர்வமுள்ளவர்களையும், விடுதலைக்காக சிறிதாவது பாடுபட்டவர்களையும் அவசியம் தேர்ந்தெடுக்கவேண்டும். பல ஊழியர்கள் காங்கிரஸே கதி என்று இரவும் பகலும் பாடுபட்டுகண்டபலன் ஒன்றுமில்லை ஊழியர்களில் ஒருசிலராவது தேர்ந்தெடுக்கப்பட்டால் ஓரளவு திருப்தியாய் இருக்கும். ஏகாதிபத்யத்தின் அடக்குமுறைக்கு ஆளாகி கணக்கற்றதொண்டர்களின் தியாகம், அடித்து நொறுக்கப்பட்ட எலும்புகள், சிந்திவழிந்தோடிய ரத்தம், ஆயிரக்கணக்கான பாழடைந்த குடும்பங்கள் தங்கள் படிப்பையும், எதிர்கால வாழ்க்கையும் துச்சமென உதறித்தள்ளிய வீர வாலிபர்களின் ஆவேசம் முதலியவைகளைக்கொண்டு கட்டி முடிக்கப்பட்ட கோட்டையான காங்கிரஸினுள் சமயசஞ்சிவிகளையும், சோம்பேறிகளையும் விடக்கூடாது. உத்தமர்களுக்கு இடம் கொடுக்க தேர்தல் போர்டாரை வேண்டுகிறோம்.

இருவரும் வேண்டும்.

தற்சமயம் கிராமங்களில் பொதுமக்களும், விவசாயிகளும் பலவகைகளிலும், கஷ்டங்களுக்கு உள்ளாகிவரும் இந்தச்சமயம் அவைகளை நிவர்த்தி செய்து பரிகாரம்தேட அரசாங்கத்தில் நேர்மையும் திறமையும் உள்ளவர்கள்தான்தேவை ஆகையால் நமது தாலூக்காவில் பெரும்பாலும் விவசாயிகளிடமும் பொதுமக்களிடமும் அதிக மதிப்புப் பெற்றவரும் ஒழுக்கமுடையவருமான ஸ்ரீ வி. கே. பழனிச்சாமி கவுண்டர் அவர்களை பொள்ளாச்சிடவுன் தொகுதிக்கு தேர்ந்தெடுக்கும்படியும், ஸ்ரீ என். மகாலிங்கம் அவர்களை கிணத்துக்கடவு தொகுதிக்கு தேர்ந்தெடுக்கும்படியும் மலையாண்டிபட்டிணம் அங்கையகவுண்டர் தெரிவிக்கிறார்.

இருவருமே வேண்டாப்

பொள்ளாச்சி டவுன் தொகுதிக்கு, ...
வி. கே. பழனிக்சாமிக் கவுண்டரு...
ஸ்ரீ என். மகாலிங்கமும் மனுச்செய்து...
னர். இவர்கள் இருவரும் சிறந்த பண...
காரர்கள். இவர்கள் எப்படி ஏழைக...
பால் அன்பு காட்டி சொத்தை பங்குபோ...
ட்டு கொடுப்பார்களா? இவர்களால் ட...
டாளிவர்க்கத்திற்கு நன்மைகிடைக்குமா...
இந்தப்பணக்காரர்கள் தான் லாயக்கா...
ஏழை ஊழியர்களான ஸ்ரீ பி. எஸ் வே...
சாமி, எம். ராமசாமி, பி டி. சென்னப்...
கவுடர் நாகப்பபிள்ளை, சேதுராமசா...
போன்றவர்களை ஏன் சட்டசபைக்கு அ...
ப்பக்கூடாது? இவர்கள் சுயநலம் பாரா...
டமாட்டார்கள். லஞ்சம் வாங்கார், பர்மி...
வேட்டையாடார். காவடி எடுக்கமாட்டா...
கள். காங்கிரஸின் கொள்கைகளை அமு...
நடத்துவார்கள். ஆகவே ஊழியர்களி...
ஒருவரை டவுன் தொகுதிக்குப் போட்...
டால் காங்கிரஸின் பெருமை ஒருபடி
உயரும்.

ஹரிஜனத் தொகுதிக்கு.

பொள்ளாச்சி டவுன் தொகுதிக்கு உள்ள...
ஹரிஜனத் தொகுதிக்கு இந்ததாலூக்காவை...
சேர்ந்தவர்களையே தான் நிறுத்தவேண்டு...
என்பது பலமான அபிப்பிராயம்; நகர, தாலூ...
க்கா காங்கிரஸ்வாதிகளும் மற்றவர்களும் வே...
று தாலூக்காவைச் சேர்ந்தவர்கள் இங்கு வரு...
வதைச்சிறிதும் விரும்பவில்லை. இங்குள்ள...
ஸ்ரீ பி. கே. திருமூர்த்தி சகலரின் அன்பிற்...
கும், ஆதரவிற்கும் பாத்திரமானவர். ஹரிஜ...
னங்களினிடையேயும், வால்பாரையில்தொழி...
லாளர்களிடையேயும் தொடர்பு உள்ளவர்.
இவரைத் தேர்ந்தெடுத்தால் திருப்தியாய்
இருக்கும்.

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பாள்ளாச்சி 20—9—51. வியாழன்.

தேர்தல் போர்டுக்கு நமது யோசனை.

பொள்ளாச்சித் தாலூக்காவிலிருந்து டசபைக்கு இரண்டு பிரதிநிதிகள் வை. அதற்கு காங்கிரஸ் தேர்தல்போ க்கு பலர் மனுப்போட்டுள்ளனர். அவர் ல் ஸ்ரீ வி. கே. பழனிச்சாமிக் கவுண் , ஸ்ரீ என். மகாலிங்கம், ஸ்ரீ சி சுப்ரம யம் ஆகிய மூவரைப்பற்றிய பிரச்சனை ன் போர்டுக்கு பெரும் தலைவலியாயிரு றது. ஸ்ரீ வி. கே பழனிச்சாமிக் கவு டர் பொள்ளாச்சித்தாலூக்காவிற்கும், ர் கோவை ஜில்லாவிற்கும், சென்னை காணத்திற்கும் கூட பயன்படத்தக்க கையில் நல்லமுறையில் சேவைசெய்து ருகிறார். பொள்ளாச்சித் தாலூக்கா வா ளுக்கு வி. கே பி. யின் சேவை மிக ம் அவசியமாக இருக்கிறது அவரைப் பரிதும் விரும்புகின்றனர். பொள்ளாச்சி வுன் பிர்க்காவைச்சேர்ந்த எல்லா கிரா ங்களிலும் வி. கே. பி. தான் சட்டசபை த கண்டிப்பாய் வர வேண்டுமென்று ங்கிரஸ்காரர்கள், முக்கியஸ்தர்கள், வசாயி—தொழிலாளி, மிராஸ்தார்கள், தலிய அனைவரும் விரும்புகின்றனர். நடுநாளைய அனுபவசாலி, திறமை மிக்க ர், நேர்மையுள்ளவர், பொதுநலப்பிரியர் னைவரோடும் பாகுபாடின்றி நெருங்கி ழகுபவர். அனைவரின் அன்பையும், ஆத வையும் பெற்றவர். எனவே இவரை கிரா ங்களிலும் டவுனிலும் விரும்புவதில் விய பில்லை இவரின் ஆதரவு இல்லையேல் தாலூக்காவில் காங்கிரஸ் வெற்றிபெறுது ன்றுகூடப் பல ஊழியர்கள் பயப்படுகி றனர் அது உள்ள நிலைமையும்கூட. ஆகவே சகல வகைகளிலும் பொருத்தம் வாய்ந்த வி. கே. பி யைத்தான் கண்டிப் பாய் பொள்ளாச்சி டவுன் தொகுதிக்கு றுத்த வேண்டுமென தேர்தல் போர் டாரை வற்புறுத்துகிறோம்.

ஆனால் ஸ்ரீ மகாலிங்கத்தின் தந்தை சுமார் 20-வருடங்களாக டவுனில் காங்கிரஸ் வேலைகளுக்கு பெரிதும் உதவியாய் இருந்துவருபவர். டவுனில் நல்ல செல்வாக்கு மகாலிங்கத்திற்குஇருக்கிறது. படித்தவர், வாலிபர். இளைஞர் காங்கிரஸில் தீவிரமாக வேலைசெய்து வருகிறார். இவரையும் விட்டுவிடுவது புத்திசாலித்தனமாகாது. மகாலிங்கத்தின் உதவியின்றி டவுனில் காங்கிரஸ் வேலைகள் வெற்றிகரமாய் நடைபெறாது. ஆகவே இவரை கிணத்துக்கடவு தொகுதிக்கு தேர்ந்தெடுத்தால் இரண்டு ஸ்தானமும் சிரமமின்றி வெகு எளிதில் காங்கிரஸ் வெற்றி பெறுவது நிச்சயம். ஸ்ரீ சி. சுப்ரமணியம் கிணத்துக்கடவு தொகுதிக்கு மனுச்செய்துள்ளார். இவரை அந்தத் தொகுதியிலுள்ள காங்கிரஸ்காரர்களோ இதர முக்கியஸ்தர்களோ ஆதரிப்பதாக தெரியவில்லை மேலும் இவருக்கு அந்தத் தொகுதியில் பலமான எதிர்ப்புஇருக்கிறது. அங்குஇவரை நிறுத்தினால்நிச்சயம்தோல்விதான். இதில் யாருக்கும் கடுகளவும் சந்தேகமே வேண்டாம். ஆனால் இவர்மந்திரியாய் வரவேண்டும். அதற்காக எப்படியும்சட்டசபைக்கு வந்தாகவேண்டும் என்று மேலிடம் விரும்புகிறது என சொல்லிக் கொள்ளப்படுகிறது. அப்படியாயின் மேல்சபைக்கு நின்று கொள்ளட்டும். அல்லது பார்லிமெண்டுக்குப்போகட்டும் அதில் யாருக்கும் ஆக்ஷேபணைகிடையாது. வீணே சட்டசபைத் தொகுதியில் நின்று காங்கிரஸ் தோற்றது என்ற பெயரை உண்டாக்க வேண்டாம். இதைக் கட்டாயம் போர்டார் சிந்திக்க வேண்டும். தொகுதிமக்கள் விரும்பாத இவரை அங்கு பலவந்தமாகத் திணிப்பது கொஞ்சமும் பொறுத்தமில்லை. இவர்மீது பலவித வருத்தங்கள், பலமான எதிர்ப்பு உண்டு. அவைகளை ஆழ்ந்து கவனிக்க வேண்டும். பொதுஜன தொடர்பு கொஞ்சமும் கிடையாது. ஊழியர்கள் என்றால் இவருக்கு கசப்பு. தியாகிகள் பிரச்சனையில் பெரிய அதிருப்தி. மந்திரிகளிடத்திலும், தலைவர்களிடத்திலும் ஸ்ரீ காமராஜ் பின்னால் சென்றுகொண்டும்மேலிடத்தில் செல்வாக்கு இருப்பதாகக் காட்டிக்கொண்டும் காரியங்கள் செய்து வருபவர். ஊழியர்களிடமும் பொதுமக்களிடமும் சிறிதும் தொடர்பற்ற இவரைக்கண்டிப்பாய் நிறுத்தக்கூடாது என்று தேர்தல் போர்டுக்கு யோசனை சொல்லுகிறோம். முடிவாக பொள்ளாச்சி டவுன் தொகுதிக்கு ஸ்ரீ வி கே. பழனிச்சாமிக்கவுண்டரையும், கிணத்துக்கடவு தொகுதிக்கு ஸ்ரீ என். மகாலிங்கத்தையும் மேல்சபைக்கு ஸ்ரீ சி. சுப்ரமணியத்தையும் நாம் சிபார்சு செய்கிறோம் சி. சுப்ரமணியத்தைத் தான் நிறுத்துவது என்பது போர்டின் முடிவானால் இந்தத் தாலூக்காவின் இரண்டு ஸ்தானங்கட்கும் காங்கிரஸின் சார்பின் அபேக்ஷகர்களை நிறுத்தவேண்டாம், அவர்கள்சொந்தசெல்வாக்கு இருந்தால் வெற்றிபெற்று வரட்டும். எப்படியும் காங்கிரஸ்காரர்கள் தான் வருவார்கள். பிறகு காங்கிரஸ் பார்ட்டியில் சேர்ந்து கொள்ளட்டும். ஹரிஜனத்தொகுதிக்கு ஸ்ரீ பி. கே திருமூர்த்திக்குத்தான்சகலரின்ஆதரவும் இருக்கிறது இந்த யோசனை நம்முடையதுமட்டுமல்ல இந்த தாலூக்காவைச்சேர்ந்த பெரும்பான்மையான காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள் ஊழியர்கள், பஞ்சாயத்து மெம்பர்கள், அபிமானிகள், முக்கியஸ்தர்கள், தியாகிகள் முதலியோருடைய அபிப்பிராயமும் கூட ஆகும். ஆகவே தேர்தல் போர்டார் விருப்பு வெறுப்பின்றி கவனம்செலுத்தி நேர்மையை நிலைநாட்டி காங்கிரஸின் கௌரவத்தைக்காப்பாற்றி பொள்ளாச்சி தாலூக்கா காங்கிரஸின் கோட்டை என்றிருக்கும் பெயரை நிலை நாட்டவேண்டுகிறோம்.

ஜெய் ஹிந்த்!

குருவி ஜோசியம்.

தெருக்களிலும் சந்துபொந்துகளிலும் சிலர்அரை ரூபாயிக்கும் ஒரு ரூபாயிக்கும் விபசாரம் செய்கிறார்கள் தங்களின் வறுமையை முன்னிட்டு, அதே சந்தர்ப்பத்தில் காரில் ஒய்யாரமாகச்சென்று ஆயிரம் ரூபாய் இரண்டாயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டும் சிலர் கற்பை விற்கின்றனர். ஆனால் இவர்கள்தெருவில் வறுமையால் வாடும் கற்பரசிகளை விபசாரிகள் என்று கூசாமல் கூறுகின்றனர். ஏளனம் செய்கின்றனர். எள்ளி நகையாடுகின்றனர், அதுபோல, சில காங்கிரஸ் ஊழியர்களிடத்தில் மக்கள் பல குறைகளைச்சொல்லி நிவாரணம் நாடுகின்றனர். அக்குறைகளைத் தீர்க்க சம்மந்தப்பட்ட அதிகாரிகளை கண்டு பேசப்போக வேண்டியிருக்கிறது. அதற்கு வழிச்செலவுக்கு கையில் காசில்லை. போக்குவரத்துக்காக ரூ. 5, 10 அவர்களிடமிருந்து வாங்கிக்கொண்டு போகவேண்டியிருககிறது, இதை ஊழியர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சட்டஞானம் தெரிந்த காங்கிரஸ் பிரமுகர்கள் சொல்லுவதாக, நமது குருவி சொல்லுகிறது. ஆனால் அதே சந்தர்ப்பத்தில் பத்தாயிரம் நாலாயிரம்ரூபாய் பெற்றுக்கொண்டு வக்கீல் என்ற போர்வையுடன் அதிகாரிகளிடம் காவடி எடுப்பதும் மேலே குறிப்பிட்ட உயர் ரக விபச்சாரம் தானே என்று குருவி கூறுகிறது: கோவை காங்கிரஸ்பிரமுகர் ஒருவர் ஊழியர்களை குறை கூறிக்கொண்டு

(5-ம் பக்கம் பார்க்கவும்.)

சபாஷ் ஸ்ரீ சி. பி. எஸ்.

வரும் தேர்தலில் சரியானபடி காங்கிரஸ் அபேக்ஷகர்களை நாங்கள் தேர்ந்தெடுக்காவிட்டால் **"புளுத்துச் சாவோம்"** என்று உடுமலையில் காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் ஸ்ரீ சி. பி. சுப்பையா (தேர்தல்போர்டு மெம்பர்) கூறியதை இந்தச்சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துகிறோம்.

விலங்கொடித்த வீரர்

பவானி பீ. ஏ ராஜகோபால்.

நிச்சயம் வெற்றி!

உழைத்து உழைத்து உருக்குலைந்து போன உத்தம ஊழியர் பவானி ஸ்ரீ பீ. ஏ. ராஜகோபால் அவர்கள் பவானிடவுன் தொகுதிக்கு தேர்தலுக்கு நிற்க மனுப்போட்டிருக்கிறார் மற்றும் ஒருபிரபல பணக்காரர் போட்டிருப்பதாகத் தெரிகிறது. தன் வாழ்க்கையையே அர்ப்பணித்து அல்லும் பகலும் உழைத்து உருக்குலைந்து போனவர். பலமுறை சிறை சென்றும், பவானியில் காங்கிரஸைத்தவிர வேறுகக்ஷி தலை எடுக்காதபடி பாடுபட்டு வருபவர் சங்கவாளி — தொழிலாளி, விவசாயி — ஏழை, எளிய பாட்டாளி வர்க்கத்தின் பண்பை அறிந்து அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களில் பங்குகொண்டு உழைத்துவருபவர் இவர்தான்சட்டசபைக்கு வரவேண்டுமென்று சகலதரப்பாரும் விரும்புகின்றனர். இதைதேர்தல் போர்டாருக்கும் 22-ம் தேதி பலர் எடுத்துச்சொல்லுவார்கள். பொதுஜன கூக்குரலையும், ஜில்லாவின் தலைசிறந்த உண்மை ஊழியனையும் அவசியம் போர்டார் கவனிக்கவேண்டுகிறோம்.

ஸ்ரீ மகாலிங்கத்திற்கு ஆதரவு.

நாட்டில் நல்லாட்சி நடைமுறையில்வர கல்வி அவசியம். தன் வாக்குரிமையை நிர்ணயிக்க கல்வி அவசியம். நாட்டின் மேன்மைக்கு கல்வி அவசியம். சட்டத்தை நிர்ணயிக்க கல்வி அவசியம் மக்களின் பண்பாட்டை உணர கல்வி அவசியம். ஆதலால் கற்றறிந்தவர்களையே வரும் தேர்தலுக்கு தேர்ந்தெடுக்க வேண்டியது மக்கள்பொறுப்பாகும். கல்வியின் வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் பாடுபடுபவரும், நாட்டின் பொருளாதாரத்தை உணர்ந்தவரும், பொதுமக்களின் நன்மதிப்பை பெற்றவரும், இளைஞர்களின் முற்போக்குக்கு ஊக்கமளித்து வருபவருமான ஸ்ரீ நா. மகாலிங்கம் அவர்களையே நம் பொள்ளாச்சித்தொகுதிக்கு அபேட்சகராகதேர்ந்தெடுக்கவேண்டும்.

வரப்போகும் சட்டசபைத்தேர்தலுக்கு நம் நகர் ஸ்ரீ நாச்சிமுத்துக்கவுண்டர் அவர்களின் குமாரர்ஸ்ரீ என். மகாலிங்கம் அவர்களையே நிறுத்தவேண்டும். பணம்நிறைய இருந்தும், செருக்கில்லாமல், நாட்டுமக்களுடன் நன்கு பழகி, நாட்டு மக்களுக்கே சேவை செய்வதில் ஈடுபட்டுள்ள நமது நகர ஸ்ரீ என். மகாலிங்கம் அவர்களையே அபேட்சகராக நிறுத்தவேண்டும். நம் நகரமக்களுக்கும் அவரே நிற்கவேண்டுமென்ற அவாவும் இருக்கிறது எனவே அவர்தேர்தலில் வெற்றிபெற்று காங்கிரஸிற்கும் நாட்டு மக்களுக்கும் சேவைசெய்வார்களென என் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

நம் நகரில் இதுவரையிலும் காங்கிரஸிற்கும் காந்தியத்திற்கும் சற்றும் மாறாத வகையில் தானும் அதன்படிநடந்தும் மற்றவர்களையும் அதேபோல் நடக்கச்செய்தும் தன் நலம் கருதாமல் பொதுநலமே பெரிதென பாடுபடுபவரும், நிவாரணங்களுக்கும், கல்வி வளர்ச்சிக்கும், இன்னும் பலதுறைகளுக்கும் வேண்டிய பொருளுதவியும் கொடுத்து சுதந்திரம் அடைந்த பின்னர் சோம்பேறிகளாய் இருந்த இந்நாட்டு நல் இளைஞர்களை தட்டிஎழுப்பி சுபீட்சம் காண வழிவகுத்து அதன்படி நடக்கசெய்துவருபவருமான ஸ்ரீ என். மகாலிங்கம் அவர்களையே அபேட்சகராகதேர்ந்தெடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீ வி. கே. பி தான் வேண்டும்.

நமது ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ கே. பழனிசாமிக்கவுண்டர் அவர்கள் ... ய்துவரும் சேவைகளை நாம் மறக்க மு... யாது. நமது ஜில்லா ஒவ்வொரு துறை... லும் முன்னேறவேண்டிய வசதிகள் ... லாம் செய்துகொடுத்து இருக்கிறார். ... ன்படி நமது ஜில்லா இன்று எல்லாத்... றைகளிலும் சிறந்து மற்ற ஜில்லாக்க... ர்கள் பார்த்து பொறாமைப்படக்கூடிய வ... யில் செய்துவிட்ட பெருமை நம் தலைவர் ... வி. கே. பழனிச்சாமிக் கவுண்டருக்குத்தா... சார்ந்ததாகும். ஆகையால் நமது ஜில்லா... க்கு அவர் செய்த சேவை இது சிறிதுதா... என்றாலும் தேர்தலில் அபேட்சகராக நின்... வெற்றிபெற்றால் நமது ஜில்லாவிற்கு ம... திரமல்ல நம் தமிழ்நாட்டிற்கு மகத்தா... சேவை செய்வார் என்று நம்புகிறேன்.

வேட்டைக்காரன்புதூர் ஸ்ரீ வி, கே. ... னிச்சாமிக்கவுண்டர் அவர்கள் பொள்ளா... நகர தொகுதிக்கு காங்கிரஸ் சார்பில் அ... ட்சகராக நிற்கவேண்டும். அவர் நமது தா... காவிலும் என் ஜில்லாவிலும் விவசாய... ற்கும் விவசாயிகளின் நன்மைகளுக்கும்நல்... பாடுபட்டிருக்கிறார், அதனால் நம் தாலு... விவசாயிகள் நல்ல பலன் அடைந்திருக்... றனர். ஆகையால் மேலும் விவசாயிகளுக்... பொது ஜனங்களுக்கும் நன்மைசெய்வார்... றுநம்பி அவரை தேர்ந்தெடுக்கும்படிதேர்... போர்டாரை தாழ்ந்தவணக்கத்துடன் பொ... ளாச்சி நகர மக்களின் சார்பில் நான்கேட்... கொள்கிறேன்,

ஸ்ரீ வி, கே, பழனிச்சாமிக்கவுண்டர் ... ர்கள் ஜவஹர்லால்நேருஜி சொல்லும்திற... யும் நேர்மையும் படைத்தவர். எந்தக்காலத்... லும் காங்கிரஸ் ஸ்தாபனத்திற்குவிரோதமா... நடந்தது கிடையாது. இனிமேலும் நடக்க... ட்டார், அவர் காங்கிரஸிற்காக எவ்வளவே... பாடுபட்டிருக்கிறார். சுதந்திரப் போராட்ட... தில் பங்குகொண்டு சிறை சென்றிருக்கிற... சிறைச்சாலையில் அக்காலத்தில் (பிரிட்டி... ஆட்சி) ஒரே அடக்குமுறை பாணமயகர்தா... இருக்கும். அந்த நேரத்தில் கூட துணிந்... துச்சமென உயிரைமதித்து சிறைசென்றி... கிறார். இவரைப்பின்பற்றி அப்போதும் எ... இப்போதும் கூடஎத்தனையோபேர்கள்கா... ரஸ் மகாசபைக்கு பாடுபட்டு வருகின்றன... போராட்ட காலங்களில் சிறையும் சென்றி... க்கின்றனர். இவர் ஜில்லா காங்கிரஸ் கமி... டித்தலைவராக இருந்தகாலத்தில் காங்கிர... வேலைகள் திறம்பட நடத்திவந்தார்என்பதை... இப்போது யாரும் எந்த தேசபக்தரும், மறை... க்கவோ, மறுக்கவோ முடியவே முடியாது,

5-ம் பக்கம் பார்க்கவும்.

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கப செட்டியார் & பிரதாஸ்.

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்.

பொள்ளாச்சி பஜார்!

ந்திரம் ஜுவல்லரி மார்ட் &
, C. C. நீலகிரி பிராண்டு
சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
ாகமாணிக்கம்செட்டியார் & பிரதர்,
போன் நெ. 85.
கடை வீதி & மார்கட் வீதி.

மாடர்ன் கபே.
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

மல் & போட்டோ போர்டுகளுக்கு
முத்து, பெயிண்டிங் ஒர்க்ஸ்;
மரப்பேட்டை வீதி.

அறிவிப்பு.

பொள்ளாச்சி டவுனில் உள்ள எல்லா
ாவுமில்களும் இனிமேல் பிரதி வெள்
ிக்கிழமை தோறும் விடுமுறை விடப்
ட்டிருக்கிறது.

மாவுமில் சங்கத்தார்,
பொள்ளாச்சி.

அறிவிப்பு.

உறதிக்கும் சேர்த்தியான வேலைப்பாட்டிற்கும்
சிக்கனத்திற்கும் உத்திரவாதமுள்ள

டால்மியா போர்ட்லண்டு
—— சிமிட்டியை ——

யாவரும் எளிதில் பெற்று உபயோகிக்கும் பொருட்டு
**பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை,
பழனி**
ஆகிய இடங்களில் கடைகள்
திறக்கப்பட்டிருக்கின்றன.

நா. மகாலிங்கம்,

டால்மியா சிமிட்டி ஏஜண்டு, **பொள்ளாச்சி.**



RAJA VENKATRAM GHEE STORES
PROP: V.C. ALAGIRISWAMY NAIDU
COIMBATORE.

(3-ம் பக்கம் தொடர்ச்சி.)

என்பது நான் இங்கு நினைவூட்டுகிறேன். இவர்காங்கிரஸ் தேர்தல் கமிட்டிகளில் பொறுப்புடன் இருந்து திறமையாக நடத்தியதைநாம் இதற்குள் மறந்துவிடக்கூடாது. அவர் மாகாணத்திலேயே காங்கிரஸிற்கு பொறுப்புவாய்ந்த மனிதராக காட்சி அளிக்கிறார் என்றால் அவர் காங்கிரஸ் மகாசபைக்கும், காந்தீயத்திற்கும், நம் நாட்டு மக்களுக்கும் செய்த சேவையின் பிரதிபலன் தான் என்பதை மறக்கக்கூடாது. இத்தகைய ஒரு மனிதர் எவ்வளவோ பதவிகளை வகித்து திறமையுடன் நடத்தி நன்மைகள் செய்து நற்பெயர் எடுத்து அவர் வரப்போகும் பொதுத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் அபேக்ஷகராக நிற்கபொறுப்புள்ளவர் என்று எல்லோருக்கும் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். இத்தகையவர்தான் நிற்கவேண்டுமென்றும் விரும்புகிறேன். ஆகையால் தேர்தல் போர்டார் சிறந்த பழுத்த தேசீயவாதியான ஸ்ரீ வி. கே: பழனிச்சாமிக் கவுண்டரையேதேர்ந்தெடுக்கவேண்டுகிறேன்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி.)

மேல் ரக விபச்சார முறையில் பணம்பெற்றுக்கொண்டும் முதலாளிகளின்காரில் சென்றுகொண்டும் அவர்களுக்கு காரியங்கள் செய்துகொடுப்பது இது எந்த தேசபக்தி மூலம் என்று குருவி கேட்கிறது, இவரின் கதர் ஜிப்பா மகிமையால் தானே பலகாரியங்கள் நடக்கிறது! மந்திரிசபையில் தனக்கு செல்வாக்கு இருப்பதாகப் பிரச்சாரம் செய்துகொண்டு காரியங்கள் சாதித்தும் பணம் சம்பாதிக்கும் இந்த தேசபக்தரைசட்டசபைக்கு அனுப்புவது பெரும் ஆபத்து என்று இன்றே நமது குருவி ஜோசியம் சொல்லுகிறது, இந்த பிரமுகர் எந்த தேர்தலுக்கு நின்றாலும்தோற்கடிக்க தியர்கிகள் உள்பட பலர் இன்றே கங்கணம் கட்டியுள்ளனர் என்பதையும், குருவி தேர்தல் போர்டுக்கு சொல்லுகிறது, பல ருசிகர விஷயங்களை குருவி சேகரித்துக்கொண்டிருக்கிறது. யோக்கியர்களை காங்கிரஸில் நிறுத்தினால் தான்குருவி ஆதரிக்கும் அயோக்கியர்களை காங்கிரஸின் பெயரால் நிறுத்தினால் அவர்களுக்கு எதிராக குருவி ஜோசியம் சொல்லும் என்று குருவி சொல்லிக்கொள்ளுகிறது.

கோவை டவுன்.

கோவை டவுன் தொகுதிக்கு ஸ்ரீ சாமுவேலும் மற்றும் சிலரும் தேர்தலுக்கு நிற்க காங்கிரஸிற்குமனுப்போட்டுள்ளனர். கோவையில் ஸ்ரீ சாமுவேல் காங்கிரஸ் கமிட்டித்தலைவராக வந்தபின் நல்ல முறையில் டவுனில் காங்கிரஸ் வேலைகள் நடைபெற்று வருகின்றன. சென்ற பல வருஷங்களைக் காட்டிலும் இந்த வருஷம் நன்றாகக்காங்கிரஸ் வேலைகள் டவுனைப்பொறுத்தமட்டில் நடந்துவருகிறது ஊழியர்களின் முழு ஆதரவும் சாமுவேலுக்கு இருக்கிறது, சிறந்த முழு நேரஊழியரான சாமுவேலை தேர்ந்தெடுப்பார்களா?

ஸ்ரீ பி. என். மகாலிங்கத்திற்கு வேண்டுகோள்.

அன்புள்ள நண்பர் அவர்களுக்கு வணக்கம் அடுத்து வரும் சட்டசபைத் தேர்தலுக்கு தாங்களும் திரு. வி. கே பழனிசாமிக்கவுண்டர் அவர்களும் காங்கிரஸ் அபேக்ஷகராகதெற்குத்தொகுதிக்கு தேர்தல் போர்டாருக்கு விண்ணப்பம் செய்திருப்பதாக பத்திரிகை வாயிலாக அறிந்தேன் சந்தோஷம். உங்கள்சேவை பெரிதும் விரும்புகிறேன். தாங்கள் நமதுதாலூக்காவில் முதியோர்கல்வி பரப்புதல் இளைஞர் காங்கிரஸ் ஏற்படுத்தி மக்களுக்கு சேவை செய்தல் ஹரிஜனசேவை இவை அனைத்தும் செய்து வருவது போற்றத்தக்கது. வி. கே. பி. அவர்கள் சுமார் 25-வருட காலமாக அரசியலில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு தம்மாலான சேவை செய்துவருகிறார். பொதுமக்களின் நன்மதிப்பு பெற்றவருங்கூட நிர்வாகத்திறமை உள்ளவர் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம்.

நிற்க தாங்களும் வி. கே. பி. அவர்களும் காங்கிரஸ் அபேக்ஷகராக தெற்குத் தொகுதிக்கு நிற்பதில் தங்களின் சேவை என்போன்றவர்களுக்குத்தான் தெரியும். குறிப்பாக கிராமங்களுக்கு அவ்வளவு தூரம் தெரியாது. (தாங்கள் பொதுசேவையில் ஈடுபட்டு குறுகிய காலம் தான் ஆகிறது.) பெரும்பாலும் கிராமமக்கள் தான் தேர்தலில் ஓட் செய்யக்கூடியவர்கள். தெற்குத்தொகுதி மக்கள் வி. கே.பி அவர்களை பெரிதும் விரும்புவதால் மக்களின் அபிப்பிராயப்படி அவரை அபேக்ஷகராக நிறுத்தி அவருக்கு பக்க பலமாகயிருந்து அன்னாரைப் பின்பற்றிநடந்துகொள்ளுவதுதான் நம் போன்றவர்களின் கடமை.

ஆகையால் தாங்கள் நேர்மையானவர், நண்பர் என்ற முறையில் இந்தக் கடிதம் எழுதியுள்ளேன். தாங்கள்சிந்தனைசெய்து யுக்தானுசாரம்போல் செய்யவும்.

அன்புள்ள,
சு. அங்கைய கவுண்டர், தலைவர்,
கிராம காங்கிரஸ் கமிட்டி,
மலையாண்டிபட்டணம்.

கிணத்துக்கடவும் ஸ்ரீ சி. சுப்ரமணியமு[...]

(சி. என். என்.)

கிணத்துக்கடவு, கோவில்பாளை[...] வாரப்பட்டி பிர்க்காக்கள் சேர்ந்தெதொ[...]க்கு கோவை ஸ்ரீ சி. சுப்ரமணியம் ம[...] போட்டிருக்கிறார் இவர் தேர்தல் போ[...]ல்மெம்பராயிருப்பதாலும், மேலிடத்[...] இவருக்கு செல்வாக்குஇருப்பதாகச்[...] பிரச்சாரம் செய்வதாலும் சிலர் கி[...]துக்கடவுத் தொகுதி இவருக்குத்த[...] நிச்சயம் என்று சொல்லி வந்ததா[...] பலர் மனுப் போடாமலிருந்தனர். பி[...] யாருக்கு தொகுதிமக்கள் ஆதரவு இ[...]கிறதோ அவர்களைத்தான் தேர்தல் போ[...]டார் எடுப்பார்கள் என்று நம்பிக்கைவ[...] பின் இப்போது பலர் மனுப் போட்டுள்[...]னர். சமீபத்தில் கிணத்துக்கடவில் [...] கூட்டம் நடைபெற்றது. காங்கிரஸ்கா[...]கள், பிர்க்காக்களின் முக்கியஸ்தர்கள் [...]ந்துகொண்டனர். யாரும் சி. சுப்ரமண[...]த்தை விரும்பியதாகத் தெரியவில்[...] இவருக்கு இங்கு ஆதரவே கிடையா[...] இவரை இங்கு யாரும் விரும்புவதில்[...] தொகுதியிலுள்ளவர்கள்விரும்பாதநப[...] தேர்தல் போர்டார் பலவந்தமாக தி[...]பார்களேயானால் அது காங்கிரஸின் [...]ல்வியில் முடியும் என்பதை ஞாபகப்ப[...]துகிறோம்.

சந்திரன் காலேஜ் ஸ்கூல்.

298, இடையர் வீதி, கோயமுத்தூ[...]
ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மே[...]பட்ட ஆண், பெண்கள், E. S. L. [...]ஸிக்கும், 20-வயதிற்கு மேற்பட்டவர்[...] மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்[...] வரை, ஹை ஸ்கூல்களிலும் சேரல[...] S. S. L. C. இண்டர் வகுப்புகள்உண்[...] ஹாஸ்டல் உண்டு.

தலைவர்:— S. R. Chandran.

சந்தா பத்திரிகை கிடைக்காதவர்கள்[...] நமது ஆபீஸிற்கு முழுவிலாசத்துட[...] தெரிவிக்கவும்.

வெற்றிகரமாக நடைபெறுகிறது

கோவை கர்ணாடிக்கில் | பொள்ளாச்சி நாராயணா டாக்கீஸில்

6-வது வாரம் | 2-வது வாரம்

எனெஸ்கே பிலிம்ஸ்

மணமகள்

மணமகள்

நடிகர்கள்

கிருஷ்ணன், மதுரம், பாலையா, சகஸ்ரநாமம், டி. பாலசுப்ரமணியம், லலிதா — பத்மினி, பாண்டியன், புளிமூட்டை ராமசாமி

டைரெக்‌ஷன்:

என். எஸ். கிருஷ்ணன்

கோவை நீலகிரி ஜில்லாக்களுக்கு விநியோகஸ்தர்கள்:

கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட்,

கோயமுத்தூர்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi